*__உங்கள் சிந்தனைக்கும் தியானத்திற்கும்.....__* __மதமும் கடவுளும் (2)__

"எல்லா மதங்களும் நல்லதைத்தான் போதிக்கின்றன. எல்லா நதிகளும் கடலில்தான் போய்ச் சேர்கின்றன......" என்ற வார்த்தைகளை பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்..........

*__எல்லா மதங்களும் நல்லதைப் போதித்தாலும்__*, மதப்பிரச்னை ஏற்படுவது துக்கமான சூழ்நிலை.! மதக்கோட்பாடுகளை நல்ல குணம் மிகுந்த மனிதர்கள் நல்லதாக போதிப்பதுமட்டுமல்ல: போதிப்பதையே செய்வார்கள். நல்லதைச் செய்ய மதத்தைவிட மனமே முக்கியம்.

*__எல்லா நதிகளும் கடலில்தான் போய்ச் சேர்கின்றன__* என்றாலும், அப்படியே முடிவுபெறாமல், __தான் உற்பத்தியான இடத்திற்கே மீண்டும் திரும்பும்__. தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள்.

இதை மிகவும் அருமையாக ஆண்டவரின் வார்த்தை சொல்வதை கவனியுங்கள்:

எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; __**தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே**__ நதிகள் __**மறுபடியும் திரும்பும்**__. (பிரசங்கி 1:7)

"நமது பாவங்களைப் போக்கி புண்ணியங்களைச் சேர்த்து, உலக வாழ்க்கையின் முடிவிலே நமது ஆத்மா, கடவுளோடு நித்திய வாழ்க்கை வாழ தகுதிபட வேண்டுமென...." எல்லா மதங்களின் அடிப்படைக் கோட்பாடுகளும் சொல்கின்றன. அதைத் தான் நாமும் வாஞ்சிக்கிறோம்.

இப்பொழுது "__நதியையும் - கடலையும்.....__" மீண்டுமாக தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள்.

- __உற்பத்தியான இடத்திற்கே மீண்டும் திரும்புவதால்__ என்ன பயன்?
- பாவப்பட்ட __எந்த மனிதனும்__, மற்றவர்களின் __பாவத்தை நீக்க__ தகுதிபெற முடியாது.
- புண்ணியங்களைச் சேர்ப்பதால், நமது __பாவங்கள் நீக்கப்படுவதில்லை__.

ஆண்டவரின் வார்த்தை மேலும் சொல்வதைக் கவனியுங்கள்:

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)

உலகைப்படைத்த __கடவுள்__ சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் பரிசுத்த தெய்வம். அவரே நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்பருமாக இருக்கிறார். அவர் மேலும் சொல்கிறார்:

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் 1:19-20)

கடவுளை வணங்கும் நாம், கடவுள் நமக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளாமல் இருந்தால், கடவுளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு எப்படி வளரும்? சிந்தித்துப் பாருங்கள்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள் 2)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 423)

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். (1 தெசலோனிக்கேயர் 5:21)

*ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.*
*அன்புடனும் ஜெபத்துடனும்,*

---

***__From Dictionary Reference:__***

**__Religion:__** any system of faith and worship, சமயம், மதம்.

**__Spiritual:__** relating to the soul or the mind, ஆன்மீக, மனத் தத்துவ:
pure, பரிசுத்தமான: holy, புனிதமான, தெய்வரீதியான

**__ஆன்மீகம்:__** ஆன்மா தொடர்பானது.

**__ஆன்மா__**: உடலிலிருந்தும் மனத்திலிருந்தும் வேறானதாகக் கருதப்படும் பொருள்: Soul

**__Soul:__**
1. the principle of life, feeling, thought, and action in humans, regarded as a distinct entity separate from the body, and commonly held to be separable in existence from the body; the spiritual part of humans as distinct from the physical part.
2. the spiritual part of humans regarded in its moral aspect, or as believed to survive death and be subject to happiness or misery in a life to come: arguing the immortality of the soul.

---